**திருக்குறள் – குறள் எண்.239**

**புகழ்**

**வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா**
**யாக்கை பொறுத்த நிலம்**

**பொருள்**

புகழ் பெறாமல் வாழ்வைக் கழித்தவருடைய உடம்பைச் சுமந்த நிலம், வசையற்ற வளமான பயனாகிய விளைவு இல்லாமல் குன்றிவிடும்.

## 24.07.2024ம் தேதிய மாநகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள்கள்

### பொருள் எண்.1

கும்பகோணம் மாநகராட்சிக்குச் சொந்தமான வரியில்லா இனங்களின் கீழ் கட்டிடக் கடை, நில வாடகை மற்றும் பெட்டிக்கடைகள் மாத வாடகை கேட்பில் உள்ள விபரம் மற்றும் மூன்றாண்டு வாடகையின் கீழ் உள்ள இனங்கள் தற்போது உள்ளது மற்றும் ஏற்கனவே உள்ள பழைய இனங்கள் இணக்கம் செய்து கணினியில் சரியான நிலையில் உள்ள விபரம், வழக்கில் உள்ள விபரம், நீண்ட நாட்களாக வசூலிக்க இயலாமல் உள்ள கேட்பினை நீக்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று நீக்கம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் தெரிவித்துள்ளதற்கிணங்க, கீழ்கண்ட விபரப்படி, குத்தகைதாரர்கள் நிலுவை வைத்துள்ள பெயர் மற்றும் முகவரியில் கண்டறிய இயலாமல் உள்ளதை, உரிய குறிப்புடன் நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டதில், 11.03.2024 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில், வருவாய் பிரிவில் விரிவான அறிக்கை சமர்பிக்கக்கோரி தீர்மானம் .ஒத்திவைக்கப்பட்டது.

| வ. எண் | இனம் | வரிவிதிப்பு எண் | பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பொருள் பாதுகாப்பகம் | 105/2016016 | என்.கருணாநிதி | 53118/- |
| 2 | பொருள் பாதுகாப்பகம் | 105/BD01/00009 | எஸ்.பாலாஜி | 612210/- |
| 3 | தந்தை பெரியார் மீன் அங்காடியில் மீன்கள் வெட்டி சுத்தம் செய்யும் உரிமம் | 105/BD01/00011 | எஸ்.சுந்தர்ராஜ் | 316418/- |
| 4 | தந்தை பெரியார் மீன் அங்காடியில் மீன்கள் வெட்டி சுத்தம் செய்யும் உரிமம் | 105/2016003 | ஆர்.பால சுப்ரமணியன் | 7638/- |
| 5 | தந்தை பெரியார் மீன் அங்காடியில் உள்ள வெட்டுக்கட்டைகள் மற்றும் தரைகடைகள் வசூல் உரிமம் | 105/2016002 | ஆர்.பால சுப்ரமணியன் | 25000/- |
| 6 | தந்தை பெரியார் மீன் அங்காடியில் உள்ள வெட்டுக்கட்டைகள் மற்றும் தரைகடைகள் வசூல் உரிமம் | 105/BD01/00008 | எஸ்.சுந்தர்ராஜ் | 727650/- |
| 7 | நேரு அண்ணா காய்கறி அங்காடி சைக்கிள் நிறுத்தம் | 105/20150001 | டி.ஜி.சரவணன் | 350248/- |
| 8 | நேரு அண்ணா காய்கறி அங்காடியில் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடம் | 105/BD01/00003 | ஆர்.சுப்புலெட்சுமி | 100000/- |
| 9 | தந்தை பெரியார் மீன் அங்காடியில் இருசக்கர வாகன நிறுத்துமிடம். | 105/20150003 | ஏ.அமுதா | 68475/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | தந்தை பெரியார் மீன் அங்காடியில் உள்ள மீன்கள் மற்றும் இதர சுமைகள் கொண்டு வரும் வாகனங்களுக்கு தினசரி கட்டணம் வசூல் உரிமம் | 105/2013006 | ஆர்.சசிகுமார் | 450300/- |
| 11 | தந்தை பெரியார் மீன் அங்காடியில் உள்ள மீன்கள் மற்றும் இதர சுமைகள் கொண்டு வரும் வாகனங்களுக்கு தினசரி கட்டணம் வசூல் உரிமம் | 105/BD01/00010 | ஆர்.பால சுப்ரமணியன் | 545738/- |
| 12 | பேருந்து நிலைய வடபுறம் உள்ள கட்டண கழிவறை | 105/2009014 | கே.சிவக்குமார் | 9884/- |
| 13 | பேருந்து நிலைய வடபுறம் உள்ள கட்டண கழிவறை | 105/2013014 | எம்.ரவி | 503508/- |
| 14 | அஞ்சலக சாலையில் உள்ள கட்டண கழிவறை | 105/20150007 | எஸ்.அழகேசன் | 147955/- |
| 15 | பெரியகடைத்தெருவில் உள்ள கட்டண கழிவறை | 105/2017023 | எஸ்.ரேணுகாதேவி | 4488/- |
| 16 | தஞ்சாவூர் சாலையில் உள்ள கட்டண கழிவறை | 105/2017024 | கே.மஞ்சுளா | 126875/- |
| 17 | பெரியகடைத்தெருவில் உள்ள கட்டண கழிவறை | 105/BD01/00016 | கே.தமயந்தி | 115500/- |
| 18 | தஞ்சாவூர் சாலையில் உள்ள கட்டண கழிவறை | 105/BD01/00019 | கே.தமயந்தி | 123267/- |
| 19 | கக்கன் காலனியில் உள்ள கட்டண கழிவறை | 105/18 | ஏ.ராஜகுமாரி | 475/- |
| 20 | சாரங்கபாணி கிழக்கு கட்டண கழிவறை | 105/2016020 | ஜி.சுதர்சன் | 7800/- |
| 21 | அஞ்சலக சாலை கட்டண கழிப்பறை | 105/BD01/00006 | பி.கரிகாலன் | 617437/- |
| 22 | காலிநிலம் | 105/300 | எம்.சண்முகம் | 6333/- |
| 23 | காலிநிலம் | 105/301 | எஸ்.மணி | 9012/- |
| 24 | காலிநிலம் | 105/303 | கே.தெட்சிணா மூர்த்தி | 1431/- |
| 25 | காலிநிலம் | 105/304 | கே.மருதப்பன் | 11505/- |
| 26 | காலிநிலம் | 105/320 | பி.எஸ்.என்.எல் மேலாளர் | 84636/- |
| 27 | தடவாடகை | 105/2006501 | ஏர்செல் லிமிடெட் | 242000/- |
| 28 | தடவாடகை | 105/2006502 | ரிலையன்ஸ் கம்யூனிகேசன் | 895836/- |
| 29 | தடவாடகை | 105/2006503 | பாரதி டெலிசோனிக் | 256608/- |
| 30 | தடவாடகை | 105/2006504 | பாரத் சஞ்சார் நிகாம் லிட் | 1206300/- |
| 31 | தடவாடகை | 105/2006505 | டாடா டெலி சர்வீஸ் | 127512/- |
| 32 | தடவாடகை | 105/2006506 | பாரத் இன்போடெல் | 385308/- |
| 33 | தடவாடகை | 105/2006507 | ரிலையன்ஸ் ஜியோ | 456297/- |
| | கூடுதல் | | | 8596762/- |

அதனடிப்படையில், மேற்கண்ட குத்தகைதாரர்களுக்கு நிலுவைத்தொகை செலுத்தக்கோரி 16.05.2024 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதில் 26 இனங்களுக்கு சார்வு செய்யப்பட்டது, நாளது தேதி வரை எவ்வித முன்னேற்றமும் இல்லை. மீதமுள்ள 07 இனங்களுக்கு கடிதம் திரும்ப வரப்பெற்றுள்ளது,

**அலுவலக குறிப்பு :** மேற்கண்ட குத்தகைதாரர்களுக்கு வருவாய் ஆய்வர் மூலம் கடிதம் சார்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பொருள் குறித்து முழுமையான அறிக்கை பெற்ற பின்னர் மாமன்றத்திற்கு புதிதாக பொருள் வைத்து பரிசீலிக்கலாம். எனவே, ஏற்கனவே உள்ள தீர்மானத்தை மாமன்றம் ரத்து செய்யலாம்.

**ந.க.எண்.579/2024/அ7**

---

## பொருள் எண்.2

இம்மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள்/கடைகளில் ஏலம் போகாத அறிஞர் அண்ணா பேருந்து நிலைய தரைதள கடை எண். 37,61,29,23 மற்றும் நாகேஸ்வரன் திருமஞ்சன வீதி காரனேசன் மருத்துவமனை எதிரில் கட்டப்பட்டுள்ள முதல் தள கடைகள் 1, 4 முதல் 08 வரையில் உள்ள கடைகளுக்கு மறு ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி ஒன்பதாம் முறையாக கடந்த 21.06.2024 அன்று கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மேயர் அவர்களின் 28.06.2024 ந் தேதி முன் அனுமதி பெறப்பட்டு ஒரு வருட வைப்புத் தொகை வசூலிக்கப்பட்டு 01.07.2024 முதல் ஒப்படைக்கப்பட்டது. 21.06.2024 நடைபெற்ற மறு ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளியில் கீழகண்டவாறு வ்ரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | கடை விபரம் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | நாகேஸ்வரன் திருமஞ்சன வீதி காரனேசன் மருத்துவமனை எதிரில் கட்டப்பட்டுள் முதல் தள கடை எண் 01 | .சி.லிங்கேஸ்வரன் 11,கவரைத் தெரு, கும்பகோணம் | 8,000/- | கடந்த 27.06.2023, 19.07.2023, 17.08.2023, 21.09.2023, 27.12.2023, 15.02.2024, 29.02.2024 மற்றும் 12.03.2024 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறவில்லை. 21.06.2024 அன்று வரப்பெற்ற திரு.லிங்கேஸ்வரன் மாற்றுத் திறனாளி என்பவரின் ஒரு ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.8,000/- ஐ மாமன்றம் ஏற்கலாம். |
| 2. | நாகேஸ்வரன் திருமஞ்சன வீதி காரனேசன் மருத்துவமனை எதிரில் கட்டப்பட்டுள் முதல் தள கடை எண் 04 | வி.கோகுல கிருஷ்ணன் 3/539 புது அக்ரஹாரம்,அம் மாசத்திரம், கும்பகோணம் | 8,100/- | கடந்த 27.06.2023, 19.07.2023, 17.08.2023, 21.09.2023, 27.12.2023, 15.02.2024, 29.02.2024 மற்றும் 12.03.2024 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறவில்லை. 21.06.2024 அன்று வரப்பெற்ற திரு. கோகுலகிருஷ்ணன் என்பவரின் ஒரு ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.8,100/- ஐ மாமன்றம் ஏற்கலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | நாகேஸ்வரன் திருமஞ்சன வீதி காரனேசன் மருத்துவமனை எதிரில் கட்டப்பட்டுள் முதல் தள கடை எண் 05 | சா.லோகநாதன் 65/272, 4 வது தெரு, அன்பு நகர், கொரநாட்டுக்கரு பூர், | 8,000/- | கடந்த 27.06.2023, 19.07.2023, 17.08.2023, 21.09.2023, 27.12.2023, 15.02.2024, 29.02.2024 மற்றும் 12.03.2024 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறவில்லை. 21.06.2024 அன்று வரப்பெற்ற திரு. சா.லோகநாதன்என்பவரின் ஒரு ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.8,000/- ஐ மாமன்றம் ஏற்கலாம். |
| 4 | நாகேஸ்வரன் திருமஞ்சன வீதி காரனேசன் மருத்துவமனை எதிரில் கட்டப்பட்டுள்முதல் தள கடை எண் 06 | செந்தில்குமார், 4/31,கொத்தன் செட்டி தெரு, கும்பகோணம். | 9100/- | கடந்த 27.06.2023, 19.07.2023, 17.08.2023, 21.09.2023, 27.12.2023, 15.02.2024, 29.02.2024 மற்றும் 12.03.2024 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறவில்லை. 21.06.2024 அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. செந்தில்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.9,100/- ஆனது கூடுதலாக உள்ளதை மாமன்றம் ஏற்கலாம். |
| | | இராஜேஸ்வரன் சிசி/94,தமிழ்பல் கலைக்கழக குடியிருப்பு, தஞ்சாவூர், | 8,800/- | |
| 5 | நாகேஸ்வரன் திருமஞ்சன வீதி காரனேசன் மருத்துவமனை எதிரில் கட்டப்பட்டுள்முதல் தள கடை எண் 07 | செந்தில்குமார், 4/31,கொத்தன் செட்டி தெரு, கும்பகோணம். | 9100/- | கடந்த 27.06.2023, 19.07.2023, 17.08.2023, 21.09.2023, 27.12.2023, 15.02.2024, 29.02.2024 மற்றும் 12.03.2024 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறவில்லை. 21.06.2024 அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. செந்தில்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.9,100/- ஆனது கூ டுதலாக உள்ளதை மாமன்றம் ஏற்கலாம் |
| | | எம்.செல்வி 28.மேல மேட்டுத்தெரு கும்பகோணம். | 8,800/- | |
| 6 | நாகேஸ்வரன் திருமஞ்சன வீதி காரனேசன் மருத்துவமனை எதிரில் கட்டப்பட்டுள்முதல் தள கடை எண் 08 | சி.துளசிராமன் 14,இரயிலடித் தெரு, தாராசுரம் | 8,500/- | கடந்த 27.06.2023, 19.07.2023, 17.08.2023, 21.09.2023, 27.12.2023, 15.02.2024, 29.02.2024 மற்றும் 12.03.2024 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறவில்லை.21.06.2024 அன்று வரப்பெற்ற திரு. சி.துளசிராமன்என்பவரின் ஒரு ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.8,100/- ஐ மாமன்றம் ஏற்கலாம். |

**அலுவலக குறிப்பு :** மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண்.1888/2021/அ7**

**பொருள் எண்.3**

கும்பகோணம் மாநகராட்சியில் பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொதுசுகாதாரப்பிரிவுகளில் தற்போது பல்வேறு திட்டப்பணிகள், திட்ட அறிக்கைகள் தயார் செய்யவும், திட்ட பணிகளுக்காக விரிவான திட்ட மதிப்பீடுகள் மற்றும் பிரேரணைகள், அரசு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் உட்பட பல்வேறு உயர் அலுவலர்களால் கோரப்படும் விபரங்கள், அறிக்கைகள் தயார் செய்ய போதிய தட்டச்சர்கள் இல்லாமையால் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) முறையில் மூன்று தட்டச்சர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.15720/2022/ஜி2, நாள்.10.10.2022ன்படி தினக்கூலி அடிப்படையில் அமர்த்திக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ஒரு வருடத்திற்கு (01.07.2024 முதல் 31.03.2025) ரூ.7.00 (ரூபாய் ஏழு லட்சம்) இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.7759/2023/சி1**

---

**பொருள் எண்.4**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்ந்தேடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்ற தலைவர்கள், மன்ற துணைத்தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான மதிப்பூதியம் மாதந்தோறும் வழங்கிட தமிழக அரசு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்.98, நாள்.13.07.2023ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையின் அடிப்படையில் இம்மாநகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர், துணைமேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கு 2024-2025ம் ஆண்டுக்கு மதிப்பூதியம் மாதந்தோறும் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.65.00 லட்சத்திற்கு (ரூபாய் அறுபத்தைந்து லட்சம்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி மதிப்பூதியத்திற்கான செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3005/2022/சி9**

---

**பொருள் எண்.5**

இம்மாநகராட்சியில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான மாமன்ற கூட்ட பொருள்கள் மாதந்தோறும் பிரிண்டிங் மற்றும் செராக்ஸ் எடுத்திட உத்தேச செலவினம் ரூ.2.00/- லட்சம் (ரூபாய் இரண்டு லட்சம்) மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.3005 / 2022 / சி9**

---

**பொருள் எண்.6**

இம்மாநகராட்சியின் பகுதியில் அமைந்துள்ள 20 மாநகராட்சி பள்ளிகளின் வளாகம் மற்றும் கழிவறை தூய்மைப்பணி மேற்கொள்ள அரசாணை எண்.166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.23.11.2016 தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண்.670 நாள்:31.07.2023 நிர்வாக அனுமதி பெறப்பட்டும், மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.34535/2023/ஜி2 நாள்:03.08.2023ன் படி தினசரி கூலி விகிதத்தில் உதயா சுய உதவி குழு மூலம் 20-பணியாளர்களை மாமன்ற தீர்மான எண்.716 நாள்:28.08.2023 அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. எனவே, இப்பணியினை எதிர்வரும் கல்வியாண்டிற்கு 01.06.2024 முதல் 31.05.2025 முடிய உள்ள காலத்திற்கு அதே விலைவிகிதத்தில், அதே சுய உதவி குழு மூலம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி அளிக்கலாம்

(ஆ) செலவினம் கல்வி நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்

**ந.க.எண்.6800/2022/எச்1**

---

**பொருள் எண்.7**

இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகள் செயல்படுத்த வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்திட சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரால் செயல்முறைகள் ந.க.எண்.35883/2022/EA1-SWM-18 நாள்.23.02.2023-ல் அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கும்பகோணம் மாநகராட்சி தீர்மானம் எண்.476 நாள்.03.03.2023-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மெஸர்ஸ் சரம் என்விரோ சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மாமன்ற தீர்மான எண்.601 நாள்.26.06.2023-ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தார்க்கு பணி உத்திரவு வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் சம்மத கடிதத்தின் அடிப்படையில் இப்பணியினை தொடர்ந்து அதே விகிதத்தில் 01.07.2024 முதல் 30.06.2025 முடிய மேற்கொள்ளவும், அதற்குண்டான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி அளிக்கலாம்

(ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்

**ந.க.எண்.1896/2023/எச்1**

---

**பொருள் எண்.8**

கும்பகோணம் மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு டெங்கு கொசு கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள (களப்பணி மேற்கொள்ள) பொது சுகாதாரத் துறை மூலமாக வழிகாட்டு நெறிமுறைகளின் படி 153 – பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண்.669 நாள்.31.07.2023 நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண்.962 நாள்.22.01.2024 அனுமதிபெறப்பட்டு குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெஸர்ஸ். ஆர். கே. கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தார்க்கு மூன்று மாத காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு கள பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் இப்பணியினை மேற்கொண்டு வரும் மெஸர்ஸ்.ஆர்.கே.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தார் மூலம் அதே விலை விதித்த்தில் மே. ஜுன், ஜுலை – 2024 மாதங்களுக்கு கால நீட்டிப்பு வழங்கும் பொருட்டு அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

(அ) அனுமதி அளிக்கலாம்.

(ஆ) தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்த காரணத்தால் பின்னேற்பு வழங்கலாம்.

(இ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5869/2023/எச்.1**

---

## பொருள் எண்.9

கும்பகோணம் மாநகராட்சி பகுதியில் பொது மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக சுற்றித்திரியும் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மாமன்ற தீர்மான எண்.262 நாள்.30.08.2022 – ல் அனுமதி பெறப்பட்டு People for Animals (Kumbakonam) Charitable Trust, Kumbakonam. அறக்கட்டளையால், அரசானை (4D) எண். 1 Animals Husbandary Dairying, Fisheries and Fisherman Welfare (AH3) Department நாள். 17.03.2023–ல் நிர்ணயிக்கப்பட்ட ரூ.1450/– (ரூபாய் ஆயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்) விலை விகிதத்தில் இப்பணிகள் நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 2024–25 நிதியாண்டிற்கு இப்பணியினை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தின் மூலம் அதே விலைவிகிதத்தில் மேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.8,00,000/– (எட்டு இலட்சம் மட்டும் ) மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி அளிக்கலாம்.

(ஆ) செலவினம் பொது நிதி கணக்கில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.9492/2023/எச்.1**

---

## பொருள் எண்.10

கும்பகோணம் மாநகராட்சி 2024–2025ம் ஆண்டிற்கான சொத்துவரி, குடிநீர் கட்டணம், புதைவடிகால் சேவைக்கட்டணம், காலிமனை வரி மற்றும் D&O, Trade License மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கான அறிவிப்புகள் மற்றும் நினைவூட்டு அறிவிப்புகள் பிரிண்ட் எடுக்க LIPI Line Matrix Printer Model 6805 பிரிண்டிங் இயந்திரம் தேவைப்படுவதால் தொகை ரூ.277890/– உள்ள இயந்திரத்தினை அவசரம் அவசியம் கருதி வாங்கியமைக்கும் அத்தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கியதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு மாநகராட்சி வசூல் பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.243/2024 /அ1**

---

**பொருள் எண்.11**

கும்பகோணம் மாநகராட்சி 2024-2025ம் ஆண்டிற்கான அனைத்து வகையான வரிகள் வசூலிக்க கேட்பு அறிவிப்பு பிரிண்ட் எடுக்க அறிவிப்புகள் பிரிண்ட் எடுக்க பிரிண்டிங் பேப்பர் மற்றும் ரிப்பன் High Speed ribbon cartridge தேவைப்படுவதால் ரிப்பன் High Speed ribbon மற்றும் பிரிண்டிங் பேப்பர் தொகை ரூ.22125/- மற்றும் ரூ.34375/- பணியின் அவசரம் அவசியம் கருதி வாங்கியமைக்கும் அத்தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கியதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு — மாநகராட்சி வசூல் பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.245/2024 /அ1

---

**பொருள் எண்.12**

இம்மாநகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 பிரிவு 268(1)ன்படி ஒவ்வொரு நிதியாண்டிலும் முதல் அரையாட்டிற்குரிய சொத்துவரி தொகையை செப்டம்பர் 30ம் மற்றும் இரண்டாம் அரையாண்டுக்குரிய சொத்துவரித்தொகையை மார்ச் 31ம் தேதிக்குள்ளும் செலுத்தப்பட நோட்டீஸ் அச்சடிக்கப்பட்டதற்கான செலவின தொகை ரூ.1,06,200/- யை Tamilnadu Multipurpose indico serve , Trichy நிறுவனத்திற்கு வழங்கியதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு — மாநகராட்சி வசூல் பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.248/2019 /அ1

---

**பொருள் எண்.13**

இம்மாநகராட்சியில் 48 வார்டுகளுக்கும் சொத்துவரி, குடிநீர் கட்டணம் பாதாளசாக்கடை கட்டணம், தொழில்வரி மற்றும் இதர இனங்கள் நிலுவை மற்றும் நடப்பு தொகையினை வசூல் பணி மேற்கொள்ள ஆட்டோ ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் (16.10.2023 முதல் 17.11.2023 வரை) செய்யும் பணிக்கு தொகை ரூ,59,400/-யை தூயவன் வர்த்தக விளம்பரம், 77/44 சாரங்கபாணி கீழவீதி உச்சிப்பிள்ளையார் கோயில் இறக்கம், கும்பகோணம் என்ற நிறுவனத்திற்கு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.248 /2023/ அ1

---

**பொருள் எண்.14**

கும்பகோணம் மாநகராட்சியில் 01.10.2018 முதல் கீழ்காணும் விவரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | சராசரி அரையாண்டு வருமாம் ரூ. | 01.10.2018 முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொழில்வரி ரூ. |
|---|---|---|
| 1 | 21000 வரை | இல்லை |
| 2 | 21001 முதல் 30000 வரை | 189 |
| 3 | 30001 முதல் 45000 வரை | 459 |
| 4 | 45001 முதல் 60000 வரை | 891 |
| 5 | 60001 முதல் 75000 வரை | 1250 |
| 6 | 75001க்கு மேல் | 1250 |

நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆர்1 நாள்.21.05.2018ல் தெரிவித்தவாறு 1920ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சி சட்டம் பிரிவு 124 டி–ன்படியும் 5 ஆண்டுக்கு ஒரு முறை மன்றத்தால் தொழில்வரி சீராய்வு செய்யப்பட்டு ஏற்கனவே நடைமுறையில் வசூல் செய்யப்படும் விகிதத்தில் 25% குறையாமலும், 35% அதிகமாகாமலும் உயர்வு செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தொழில்வரியை 01.10.2024 முதல் கீழ்கண்டவாறு வரி சீராய்வு செய்ய மாமன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | சராசரி அரையாண்டு வருமாம் ரூ. | 01.10.2024 முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொழில்வரி ரூ. |
|---|---|---|
| 1 | 20000 வரை | இல்லை |
| 2 | 20001 முதல் 30000 வரை | 256 |
| 3 | 30001 முதல் 45000 வரை | 620 |
| 4 | 45001 க்கு மேல் | 1250 |

மேற்கண்டவாறு 01.10.2024 முதல் தொழில்வரியை உயர்வு செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நாளிதழில் விளம்பரம் செய்திடும் செலவினத்துக்கும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திட ஆகும் செலவினத்துக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.17922/2013/மண்டலம்.1–அ3**

---

**பொருள் எண்.15**

இம்மாநகராட்சியின் பொறியியல் பிரிவு பராமரிப்பு வாகனம் TN49 AX2923 (BOLERO) வாகனம் பழுதடைந்த நிலையில் இருந்து வந்தது தற்போது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு,அதற்குண்டான அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால், புதிய வாகனம் வாங்க காலதாமதம் ஆகும் நிலை ஏற்படும் என்பதனை கருத்தில் கொண்டு மேற்படி வாகனத்தை அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்ய வேண்டியதால் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்றதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்<br>தனலெட்சுமி நகர்,மயிலாடுதுறை ரோடு<br>கும்பகோணம் | 121460/- |
| 2 | தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் சென்டர்,<br>1-A/12 புறவழிச்சாலை<br>விஜயபுரம், திருவாரூர் | 131850/- |
| 3 | அன்னை சத்தியா என்ஜியரிங் ஒர்க்ஸ்,<br>13.ராம்கே ரோடு<br>திருவாரூர் | 136641/- |

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி அளிக்காலம்

(ஆ) அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்காலம்

இ செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**ந.க.எண்.4635/2024/எச்.1**

---

## பொருள் எண்.16

இம்மாநகராட்சியின் பொறியியல் பிரிவு பராமரிப்பு வாகனம் TN49 AX2908 (BOLERO) வாகனம் பழுதடைந்த நிலையில் இருந்து வந்தது தற்போது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு,அதற்குண்டான அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால், புதிய வாகனம் வாங்க காலதாமதம் ஆகும் நிலை ஏற்படும் என்பதனை கருத்தில் கொண்டு மேற்படி வாகனத்தை அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்ய வேண்டியதால் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்றதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்<br>தனலெட்சுமி நகர்,மயிலாடுதுறை ரோடு<br>கும்பகோணம் | 75553/- |
| 2 | தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் சென்டர்,<br>1-A/12 புறவழிச்சாலை<br>விஜயபுரம், திருவாரூர் | 79209/- |
| 3 | அன்னை சத்தியா என்ஜியரிங் ஒர்க்ஸ்,<br>13.ராம்கே ரோடு<br>திருவாரூர் | 83467/- |

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி அளிக்காலம்

(ஆ) அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்காலம்

இ செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**ந.க.எண்.4617/2024/எச்.1**

---

**பொருள் எண்.17**

இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனங்களுக்கான சாலைவரி,வாகன காப்பீடு தொகை போன்றவை 2024-25ம் நிதியாண்டிற்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே அத்தொகையினை அவ்வொப்பொழுது பெறப்படும் கோப்புகளின் அடிப்படையில் செலுத்தவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.10,00,000/-(பத்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி அளிக்காலம்

(ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**ந.க.எண்.3701/2019/எச்.1**

---

**பொருள் எண்.18**

கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான குடிதாங்கி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து எடுக்கப்படும் குடிநீரானது வலையப்பேட்டை நீருந்து நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கும்பகோணம் நகரப் பகுதிக்கு வரும் குடிநீர் பிரதானக் குழாய்கள் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோக குழாய் மூலம் நகர மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 1 முதல் 48 முடிய உள்ள வார்டுகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணி நவம்பர் மாதம் முடிக்கப்பட்டுள்ளது. டிசம்பர்.2023, ஜனவரி மற்றும் பிப்ரவரி 2024 ஆகிய மாதங்களுக்கு தொடர்ந்து பணி மேற்கொள்ள ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திரு.என்.சரவணன் அவர்களிடம் அதே விலைவிகிதத்தில் சம்மதக் கடிதம் பெற்று பணி மேற்கொண்டதற்கும், அதற்கான செலவினம் ரூ.12.00 இலட்சம் (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் பார்வைக்கும் ,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. மேற்படி பணிக்கான செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணி மிகவும் அவசர பணி மற்றும் மக்களின் அடிப்படை தேவையான குடிநீர் பணியாகும். எனவே இப்பணியின் அவசர அவசயம் பணியை மேற்கொண்டமைக்கும் மாமன்ற நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி பணி மேற்கொண்டதன் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u> 1.மாமன்றம் பொருள் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3951 /2023/E3**

---

**பொருள் எண்.19**

மாண்புமிகு நகராட்சி நிவாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார திட்டம் (Street Vendors Welfare) தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்.

இதைத்தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண் 20789/2021/UPA1 நாள்.16.06.2022-ல் தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குப்படுத்துதல்) திட்டம் மற்றும்

விதிகள்–2015 ன் படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத்திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 1263 நபர்கள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டையும் மற்றும் விற்பனைச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA நாள்.07.06.2024–ல் தற்போது தெருவோர வியாபாரிகளின் கணப்கெடுப்புப்பணி முடிவுற்றதால், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள் –2015, அத்தியாயம் IV–ன் படி, நகர விற்பனைக்குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV–ன் படி, நகர விற்பனைக்குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | |
|---|---|
| மாநகராட்சி ஆணையர் | 1 (தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | 1 |
| காவல் அலுவலர் ( போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | 2 |
| மாநகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | 1 |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | 6 |
| வணிகர் சங்கப் பிரதிநிதி | 1 |
| அரசு சாரா மற்றும் சமூதாய அமைப்பின் பிரதிநிதிகள்(NGDS) | 2 |
| குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதி | 1 |

மேற்கண்ட 14 உறுப்பினர்களில் 8 உறுப்பினர்களை (தெருவோர வியாபரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர், அவர்களால், நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 1263 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை கீழ்காணும் விவரப்படி தேர்வு செய்யப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | தாழ்த்தப்பட்டோர் வகுப்பினர் | 1 |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் | 1 |
| 3 | மகளிர் வகுப்பினர் | 1 |
| 4 | மாற்றுத்திறனாளி வகுப்பினர் | 1 |
| 5 | சிறுபான்மையினர் வகுப்பினர் | 1 |
| 6 | பொது /பிற வகுப்பினர் | 1 |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், மற்றும் இடம் குறித்து மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3)–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படவேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகர விற்பனைக்குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்காணும் அட்டவணைப்படி நடத்த மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

தேர்தல் நடைபெறும் இடம்: மாநகராட்சி அலுவலகம், கும்பகோணம்.

| தேர்தல் விவரப்பட்டியல் | நாள் | நேரம் |
|---|---|---|
| தேர்தல் அறிவிக்கை வெளியிடுதல் | 03.07.2024 | |
| வேட்பு மனுக்கள் பெறுதல் | 15.07.2024 | காலை 10.00 மணி முதல் |

| | | |
|---|---|---|
| | | பிற்பகல் 3.00 மணி வரை |
| வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் | 23.07.2024 | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை |
| வேட்பு மனு பரிசீலனை | 24.07.2024 | காலை 10.00 மணி முதல் |
| வேட்பு மனுக்கள் வாபஸ் பெறுதல் | 25.07.2024 | பிற்பகல் 3.00 மணி வரை |
| வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | 02.08.2024 | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | 02.08.2024 | மாலை 6.00 மணிக்கு நடைபெறும் |

அலுவலக குறிப்பு

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையின் படி தேர்தல் நடத்தவும், உறுப்பினர்களை தேர்வு செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மான்றம் அனுமதி வழங்கலாம்.
3. விதிகளின்படி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க. எண் .8235/2014/டி2

---

## பொருள் எண்.20

இம்மாநகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு நான்கு மண்டலங்களுக்கு உட்பட்ட 48 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு ஏற்படுத்த விலைப்புள்ளி கோரப்பட்டதில் கலைக்குழுவினர்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது..

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை நாள் ஒன்றுக்கு (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | சிவ சக்தி கிராமிய கலைக்குழு<br>வள்ளலார் குடில்,வள்ளலார் சாலை<br>சாய்ராம் நகர்,விருத்தச்சலாம்,கடலூர் | 25000/– |
| 2. | ஜெயம் கலைக்குழு<br>கிருஷ்ணகிரி மாவட்டம் | 27000/– |
| 3. | உதயம் கலைக்குழு<br>தருமபுரி மாவட்டம் | 29000/– |

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி வழங்கலாம்

(ஆ) குறைந்த விலைவிகித விலைப்புள்ளி கொடுத்துள்ள சிவசக்தி கிராமிய கலைக்குழு,விருத்தாசலம், கடலூர்–நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்

(இ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்

**ந.க.எண்.4701 / 2024 / எச்1**

---

## பொருள் எண்.21

இம்மாநகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சடித்து வாங்குவற்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கு அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனத்திலிருந்து வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வீஸ், திருச்சி கூட்டுறவு நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4410 / 2022 / சி5**

---

## பொருள் எண்.22

இம்மாநகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுதுபொருட்கள், கணினி பிரிவுகளுக்கு தேவையான டோனர்கள் வாங்குவற்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கு அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனத்திலிருந்து வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வீஸ், திருச்சி கூட்டுறவு நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4411 / 2022 / சி5**

---

## பொருள் எண்.23

இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு தூய்மைப்பணிக்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் இருப்பு குறைவாக உள்ளதால், எதிர்வரும் மழைக்காலத்தில் நோய் தொற்று ஏற்படாவண்ணம் பொது சுகாதாரத்தை பேணிக்காக்கும் பொருட்டு தேவையான கிருமி நாசினி பொருட்களான பிளீச்சிங் பவுடர் –10–மெட்ரிக்டன், நீர்த்த சுண்ணாம்பு 40 மெட்ரிக்டன் வாங்கவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.10–இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

(அ) எதிர்வரும் மழைக்காலத்தினை கருத்தில் கொண்டு நகரின் பொது சுகாதாரத்தை பேணிக்காக்கவும் பொருட்டு அனுமதி அளிக்கலாம்

(ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5552/ 2024 / எச்1**

---

## பொருள் எண்.24

இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு பராமரிப்பு பணிகளில் கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ள பயன்படும் மருந்து பொருட்களான B.T-பவுடர்– 600கிலோ, MLO – Oil 2000-லிட்டர், டெமிபாஸ் (அபேட்), முதிர்கொசு மருந்து பைரித்திரம் 2%, Extract-700 ltr, டெக்னிக்கல் மாலதியான்-700 ltr போன்ற மருந்துகள் 2024–25ம் நிதியாண்டிற்கு வாங்கிடவும் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கிடவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ25.இலட்சம் (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ அனுமதி அளிக்கலாம்

ஆ செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 5553 / 2024 / எச்1**

---

## பொருள் எண்.25

கும்பகோணம் மாநகராட்சி வார்டுஎண் 46 ஆணைக்காரன்பாளையம் MRF (Material Recovery facility ) SBM–2.0 –2022–23 திட்டத்தின்கீழ் பொருள் மீட்புமையம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு கூடுதல் பாதுகாப்பு பணிகளாக, மையத்தினை சுற்றி Weld mesh அமைத்தும், முன்புறமும், பின்புறமும் Rolling shutter அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.50இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5741/2024/E3**

---

## பொருள் எண்.26

கும்பகோணம் மாநகராட்சி –சாரங்கபாணி தெற்கு சாலையின் ஓரத்தில் மழைநீர் தேங்காதவாறு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.30 இலட்சம் (ரூபாய் இரண்டு லட்சத்தி முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5740/2024/இ3**

---

**பொருள் எண்.27**

கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரையிலான வார்டுகள் மற்றும் வார்டு எண்.14ல் வீரைய்யா நகர் விடுபட்ட இடங்களுக்கு புதியதாக மின்கம்பங்கள் அமைத்து புதியதாக தெருவிளக்குகள் அமைக்கும் பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.9061/2023/இ3**

---

**பொருள் எண்.28**

கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட BSNL நிறுவன அலுவலகம் (ம) குடியிருப்பு கட்டிடங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண் ந.க.எண்.24385/R1/2023-5 நாள்.07.05.2022ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு அதன் அதிகாரிகள் முன்னிலையில் அளவீடு செய்து மத்திய அரசு நிறுவனமான தொலைதொடர்பு துறையிலிருந்து BSNL வசம் ஒப்படைக்கப்பட்ட நாள் (2011-2012/1) முதல் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிப்பு வழங்கி வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் மாமன்றத்தின் பார்வைக்கு. மேலும் தவறாக உள்ள வரிவிதிப்பு எண்.105/048/900366ஐ நீக்கம் செய்து நிலுவை தொகை ரூ.8,43,506/-ஐ தள்ளுபடி செய்யவும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.10225/2018/அ1**

---

**பொருள் எண்.29**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ள பசுமை தமிழகம் திட்டத்தின் கீழ் உலக வெப்பமயமாதலை தடுக்கும் பொருட்டு அனைத்து மாநகராட்சி / பகுதியிலும் மரக்கன்றுகள் வளர்த்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாநகராட்சிக்குட்பட்ட 48 வார்டுகளிலும் பொது மக்கள் பங்களிப்புடன் தலா 500 மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரு மாநகர வார்டுக்கு 500 மரக்கன்றுகள் நட்டு பராமரித்திட இலக்கு நிர்ணயிக்க அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 6146 / 2024 / எச்1**

---

**மேயர்**
**கும்பகோணம் மாமன்றம்**